www.tamilarangam.net

# தமிழக ஈழ நட்புறவுக் கழகம்

தோழர்களே!

சென்ற ஆண்டு ஆகசுடு மாதம் இலங்கையில் நடைபெற்ற இன ஒடுக்கலில் தமிழர்கள் அடைந்த இன்னல்கள் பலப்பல.

இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து சிங்களவர்களால் திட்டமிட்டுத் தாக்கப்பட்டு அழிக்கப்படுகிறார்கள்.

★ 1948 இல் மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

★ 1949 இல் அவர்களுடைய வாக்குரிமையும் பறிக்கப்பட்டது.

★ 1956 இல் 'இலங்கையின் ஆட்சிமொழி சிங்களம் மட்டுமே' என்று ஆக்கப்பட்டது.

★ உச்சக் கட்டமான மொழி வெறியின் விளைவாக 1958 இல் நடைபெற்ற இன ஒடுக்கல் முயற்சியில் தமிழர்கள் சென்ற ஆண்டு நடைபெற்றது போன்ற வன்முறைக்கு ஆளாகியுள்ளார்கள்.

★ தமிழ்ப் பகுதிகளில் சிங்கள அரசின் உதவியுடன் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ மொழியைக் காரணமாக வைத்துத் தமிழர்கள் வேலை வாய்ப்புகளிலும் ஒடுக்கப் பட்டனர்.

★ தமிழர்களுக்கு மேற்கல்வி வாய்ப்புகள் மறுக்கப்பட்டன.

★ பொருள் வளர்ச்சித் திட்டங்களில் தமிழ்ப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டன

★ இந்த நடைமுறைகளின் தொடர்ச்சியே சென்ற ஆண்டு நடைபெற்ற தமிழ் இனப் படுகொலை.

★ இத்தகைய நிகழ்ச்சிகளின் ஒட்டுமொத்த விளைவாகவே இலங்கைத் தமிழர்கள் தங்களுக்கென்று தனி நாடு காண முடிவு செய்துள்ளனர்.

★ சாதி சமய வேறுபாடற்ற பொதுமை 'ஈழம்' அமைக்க அவர்கள் உறுதி பூண்டு உயிரைப் பணயம் வைத்துப் போராடுகின்றனர்.

தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் உள்ள தொடர்புகளைப் பேணிக் காத்து இரண்டு நாடுகளிடையே நல்ல உறவை உருவாக்க வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே **தமிழக ஈழ நட்புறவுக் கழகம்** தொடங்கப் பெற்றுள்ளது.

தமிழகத்திலுள்ள முற்போக்கு எண்ணம் கொண்ட அனைவரும் நம்முடைய மொழி பேசுகின்ற இனத்தார் அண்டை நாட்டில் பலவகையான இன்னல்களுக்கு ஆளாகி **'ஈழவர்'** என்கின்ற பெயரில் ஒன்றிணைந்து **'ஈழம்'** என்ற ஒரு நாடு அமைக்கப் போரிட்டுக் கொண்டுள்ளார்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்குக் கட்சி வேறுபாடு தவிர்த்து முழு ஆதரவினைத் தருதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

நட்புறவுக் கழகத்தில் உறுப்பினராகுங்கள்!
நட்புறவுக் கழகக் கிளையைத் தொடங்குங்கள்!
ஈழச் செய்திகளை அறிவதற்கும் பிறவற்றிற்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**தமிழக ஈழ நட்புறவுக் கழகம்**
75, ஆழ்வார்பேட்டைத் தெரு,
சென்னை-600018.

Re. This was printed on the 1st of July to be distributed at the 2 [illegible] Conference on Sunday 2/7/78

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்